# தினத் தந்தி
DAILY THANTHI

நெல்லை (29-7-2017) சனிக்கிழமை | மலர் 75 இதழ் 270 | பவள விழா ஆண்டு | ஹேவிளம்பி ஆடி




## கல்லூரி விழா

நெல்லை, ஜூலை.29-

நெல்லை சாரதா மகளிர் கல்லூரியில் கணிதவியல் துறை சார்பில், "வரைபடமும் அதன் பயன்களும்'' என்ற தலைப்பில், சிறப்பு நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் கல்லூரி முதல்வர் மலர் விழி வரவேற்றார். கணிதவியல் துறை பேராசிரியர் அம்மணி பேசினார். இதில் மதுரை சரஸ்வதி நாராயண் கல்லூரி ஆய்வு மையம் சுவாமிநாதன் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு "புள்ளித்தளத்தில் உள்ள மேற்பரப்பு" குறித்து பேசினார். இதில் கல்லூரி ஆசிரியர்கள் மற்றும் மாணவிகள் கலந்து கொண்டனர்.